# ‘அன்பான சிங்கம்’: புதிய வகை பெற்றோர்

பிள்ளைகளின் சாதனைகளிலும் செயல்பாட்டிலும் அதிகளவு கவனம் செலுத்தும் பெற்றோரை ‘அன்பான சிங்கம்’ என்று சிங்கப்பூர் கொள்கை ஆய்வுக் கழகம் பெயர் சூட்டியுள்ளது. ‘டைகர் மம்’ என்ற பதத்திலிருந்த இந்தச் சொல்லை ஆய்வுக் கழகத்தினர் உருவாக்கியுள்ளனர்.

தொடக்கப்பள்ளி குறித்த பெற்றோரின் மனப்போக்கு பற்றிய ஆய்வின் முடிவுகள் குறித்து பகிர்ந்துகொண்ட ஆய்வுக் கழகத்தின் மூத்த ஆய்வாளரான மேத்யு மேத்யூஸ், “அன்பான சிங்கம்” பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளுக்கு எல்லாமே வேண்டும் என நினைக்கிறார்கள் என்றார்.

கொள்கை ஆய்வுக் கழகத்தின் ஏற்பாட்டில் நேற்று நடந்த “பெற்றோர்களும் பள்ளிப் படிப்பும்” என்ற கருத்தரங்கில் அவர் உரையாற்றினார்.

“ஏட்டுக் கல்வி மட்டும் போதாது, தங்கள் பிள்ளைகளுக்கு மற்றத் திறன்களும் போட்டித்தன்மையும் வேண்டும் என்பது அவர்களுக்குத் தெரியும்,” என்று கூறினார்.

“பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியான சூழலைத் தர விரும்புகிறார்கள். அதேநேரத்தில் சிறந்த மதிப்பெண்களையும் எதிர்பார்க்கிறார்கள்,” என்றார் டாக்டர் மேத்யூஸ்.

இந்த எதிர்பார்ப்புகளால் பெற்றோர் அதிகளவு மன உளைச்சலுக்கு உள்ளாகின்றனர். பிறகு தங்களது மன உளைச்சலை தங்களது பிள்ளைகளின் மேல் திணிக்கிறார்கள் என்ற அவர், அவர்கள் பிள்ளைகள் மேல் அக்கறை கொண்டிருப்பதால் ‘அன்பான’ என்ற வார்த்தையைப் பயன்படுத்துவதாக சொன்னார்.

ஆய்வில் பங்கேற்றவர்களில் 30 விழுக்காட்டினர் இந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள்.

கடந்த ஆண்டு 1,500 சிங்கப்பூரர்கள், நிரந்தரவாசிகளிடம் நடத்தப்பட்ட இந்த ஆய்வில் தெரியவந்த முக்கிய விவரங்கள் சென்ற ஜூலை மாதத்தில் வெளியிடப்பட்டன.

ஆய்வில் கலந்துகொண்டவர்களில் பெரும்பாலானவர்கள் தங்கள் பிள்ளைகளின் தொடக்கப்பள்ளிக் கல்வியில் திருப்தி உடையவர்களாக உள்ளனர்.

ஆய்வில் பங்கேற்ற 34 விழுக்காட்டினரைப் பழமையான சிந்தனைவாதிகள் என்றும் 29 விழுக்காட்டினரைப் புதிய சிந்தனைவாதிகள் என்றும் ஆய்வு வகைப் படுத்தியது.

புதிய சிந்தனைவாதிகள் பிள்ளைகளில் ஏட்டுக்கல்வி தேர்வு முடிவுகள் அல்லது சாதனைகள் பற்றி அதிகம் கவலைப்படுவதில்லை.

முழுமையான கற்றல், பிள்ளைகள் தங்களது விருப்பத்தை அடைய உதவுதல், அவர்களின பண்புகளை வளர்த்தல் ஆகியவையே புதிய சிந்தனைவாதிகளின் அக்கறையாக உள்ளது என்றார் டாக்டர் மேத்யூஸ்.

அதேநேரத்தில், பழமையான சிந்தனையுள்ளவர்களுக்கு பிள்ளைகள் சிறந்த தேர்ச்சியைப் பெற வேண்டும் என்பதே முக்கியமாக இருக்கிறது.

“அவர்களது பிள்ளை வளர்ப்பு முறை, பள்ளிக்கல்வி பற்றி அதிகம் தெரிந்திராத 1970கள், 1980களின் கால கட்டத்துப் பெற்றோர்களுடையதைப் போன்று உள்ளது,” என்று அவர் தெரிவித்தார்.

எனினும், கிட்டத்தட்ட எல்லாப் பெற்றோரும், 94 விழுக்காட்டினர், சிறந்த தேர்ச்சியில் கவனம் செலுத்துவதைவிட தங்கள் பிள்ளைகளுக்கு மகிழ்ச்சியான சூழலை உருவாக்கித் தரவே விரும்புகின்றனர் என்பதும் ஆய்வில் தெரிய வந்தது.

எனினும் இது எவ்வாறு செயல்படுத்தப்படுகிறது என்பது மாறுபடலாம் என்று டாக்டர் மேத்யூஸ் கூறினார்.

Source: Tamil Murasu © Singapore Press Holdings Ltd. Permission required for reproduction.